**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI**

**(AProjectofSriMarudharKesariJainTrust)**

**Recognized u/s 2(f) & 12(B) by UGC Act 1956-Permanently Affiliated to Thiruvalluvar University**

**Re-Accredited by NAAC with "A" Grade -An ISO 9001:2015 Certified Institution**

## PG DEPARTMENT OF TAMIL ORGANIZED ON
## SIRARILAKKIYA MANAADU - 22.12.2021TO 23.12.2021

## INVITATION




**PRINCIPAL**
larudhar Kesari Jain College
for Women
Vaniyambadi - 635 751

MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI

(AProjectofSriMarudharKesariJainTrust)

Recognized u/s 2(f) & 12(B) by UGC Act 1956-Permanently Affiliated to Thiruvalluvar University

Re-Accredited by NAAC with "A" Grade -An ISO 9001:2015 Certified Institution

## PG DEPARTMENT OF TAMIL ORGANIZED ON
## SIRARILAKKIYA MANAADU - 22.12.2021TO 23.12.2021




PRINCIPAL
Marudhar Kesari Jain College
for Women
Vaniyambadi - 635 751

**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI**

**(AProjectofSriMarudharKesariJainTrust)**

**Recognized u/s 2(f) & 12(B) by UGC Act 1956-Permanently Affiliated to Thiruvalluvar University**

**Re-Accredited by NAAC with "A" Grade -An ISO 9001:2015 Certified Institution**

## PG DEPARTMENT OF TAMIL ORGANIZED ON SIRARILAKKIYA MANAADU - 22.12.2021TO 23.12.2021

## REPORT

**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN,VANIYAMBADI**

**PG DEPARTMENT OF TAMIL ORGANIZED SIRAR ILAKKIYA MANAADU – 22.12.2021 TO 23.12.2021**

**REPORT**

வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் 22.12.2021 மற்றும் 23.12.2021 ஆகிய இரண்டு நாட்கள் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி முதுகலைத் தமிழ்த்துறை மற்றும் படித்துறை புத்தக அறக்கட்டளை இணைந்து நடத்தும் சிறார் இலக்கிய மாநாடு 2021 நடைபெற்றது.

முதல் நாளான 22.12.2021 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்லூரியின் தலைவர் உயர்திரு ஸ்ரீ M.விமல்சந்த் ஜி ஜெயின் மற்றும் கல்லூரிச் செயலாளர் திரு. ஸ்ரீ C. லிக்மிசந்த் ஜி ஜெயின் இவர்களின் தலைமையில் கல்லூரி முதல்வர் முனைவர் M. இன்பவள்ளி, மக்கள் தொடர்பு அலுவலர் B.சக்திமாலா, முதுகலை வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் C.நித்யா, முதுகலை தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கோ.பா.தாட்சாயிணி, படித்துறை புத்தக அறக்கட்டளை தலைவர் ப.இளம்பரிதி, சிறப்பு விருந்தினர்களான இராசி அழகப்பன், சுப்ரபாரதி மணியன், மோ.அருண் ஆகியோரின் முன்னிலையில் இறைவணக்கத்துடன் குத்துவிளக்கு ஏற்றி இவ்விழா தொடங்கப்பட்டது.

இவ்விழாவின் தொடக்கமாக முதுகலைத் தமிழ்த்துறை மாணவி மருதர் முத்தமிழ் மன்ற செயலாளர் பா.ரம்யா வரவேற்புரை ஆற்ற முதல்வர் அவர்கள் சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசும் வழங்கினார். முதல்வர் அவர்கள் வாழ்த்துரை வழங்கும் போது வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம், படித்துறை புத்தக அறக்கட்டளையோடு மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியும் இணைந்து சிறார் இலக்கிய மாநாடு நடத்துவதில் நான் பெருமகிழ்வு கொள்கிறேன். இந்நிகழ்வு மாணவியர்களின் கற்பனை திறனையும் அறிவுத்திறனோடு வளர்க்கும் வகையில் அமைய வேண்டும் என்ற கருத்தில் நடத்த முற்பட்டதாகும் என்று கூறினார்.

சிறப்பு விருந்தினரான கவிஞர்.இயக்குநர்.இராசி அழகப்பன் அவர்கள் தமிழத்திரையில் சிறார்கள் அந்த காலத்து திரைப்படங்களில் சிறார்களை சிறார்களாக மதிக்கப்பட்டார்கள். ஆனால் இன்று கேலிச்சித்திரங்களாக பார்க்கக் கூடிய சூழல் உள்ளது என்று எடுத்துரைத்தார். தொடர்ந்து சிறப்பு விருந்தினரான எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன் அவர்கள் சின்னத்திரையில் சிறார்கள் என்ற தலைப்பில் உரையாற்றும்பொழுது சின்னத்திரையில் அதிக கவனம் செலுத்துவதை விட படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் சிறப்பு விருந்தினரான மோ.அருண் அவர்கள் அயல் திரையில் சிறார்கள் உலக மொழிகளில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத ஒரு சிறப்பு தமிழுக்கு உண்டு என்று எடுத்துரைத்தார். இம்மாநாட்டு நிகழ்வில் மேலும் பல எழுத்தாளர்களும், கவிஞர்களும், பல்துறை தலைவர்களும், பேராசியர்களும், மாணவியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வுக்கு மூன்றாமாண்டு உயிர் தொழில் நுட்பவியல் துறை மாணவி சு.ரீத்திகா தொகுப்புரை வழங்கினார். நிறைவாக முதுகலைத் தமிழ்த்துறை மாணவி பெ.பூந்தமிழ் நன்றியுரை நவில நாட்டுப்பண்ணுடன் இந்த சிறார் இலக்கிய மாநாட்டின் முதல் நாள் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

இரண்டாம் நாளான 23.12.2021 (வியாழக்கிழமை) இன்று காலை 10 மணியளவில் **"அழ.வள்ளியப்பா நூற்றாண்டை முன்வைத்து"** பேரா.இரத்ன நடராசன் அவர்கள் தலைமையில் முனைவர்.அ.சந்தான கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையில் இறை வணக்கத்துடன் இவ்விழா தொடங்கியது.

PRINCIPAL
Marudhar Kesari Jain College
for Women
Vaniyambadi - 635 751

**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI**

**(AProjectofSriMarudharKesariJainTrust)**

**Recognized u/s 2(f) & 12(B) by UGC Act 1956-Permanently Affiliated to Thiruvalluvar University**

**Re-Accredited by NAAC with “A” Grade -An ISO 9001:2015 Certified Institution**


## PG DEPARTMENT OF TAMIL ORGANIZED ON
## SIRARILAKKIYA MANAADU - 22.12.2021TO 23.12.2021

REPORT

பேரா.இரத்ன நடராசன் அவர்கள் சிறப்புரையாற்றும் போது முயல், ஆமை கதை மூலம் நாம் முயல்வது நம்மை சார்ந்தவர்களையும் முன்னேற்றுவது தான் உண்மையான முன்னேற்றம் என்றுரைத்தார். தொடர்ந்து அ.சந்தான கிருஷ்ணன் அவர்கள் அழ.வள்ளியப்பா பாடல்கள் நீதிகளையும் எழுத்தின் உச்சரிப்புகளையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன என்று உரையாற்றினார். சிறப்பு விருந்தினரான நீதிமணி அவர்களுடன் வந்த குழுவினர் இசையோடு மிட்டாய் வகைகள் மற்றும் காய்கறி பாடல்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர். நீதிமணி அவர்கள் பல வகையான சிறப்பானதொரு சிறார் கதைகளை எடுத்துச் சொல்லியும் மாணவியர்களை மகிழ்வித்தார்.

திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரியின் தமிழ்த்துறை பேரா.முனைவர் கி.பார்த்திபராஜா அவர்கள் சிறப்புரையாற்றுகையில் ஒவ்வொரு மனிதனின் வியர்வையின் மூலம் தான் கூத்தானது சிறப்படையும். மேலும் இயல்பாகவே சிறுவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் நாடகங்கள் முக்கியத்துவம் பெற்றதாக அமைகிறது. சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், பத்திரிகையாளர் சுந்தரபுத்தன் அவர்களும், கவிஞர் பழ.புகழேந்தி அவர்களும் சிறப்புரை ஆற்றும் பொழுது பாடப்புத்தகத்தை தாண்டி படிக்க வேண்டும். மனதில் சிறுவயதில் போடுகின்ற உரம் வருங்காலத்தில் அவர்களுக்கு அது ஒரு வளமாக அமையும் என்று எடுத்துரைத்தனர். அடுத்து எழுத்தாளர், இயக்குநர், பாரதி கிருஷ்ணகுமார் அவர் “சிறார்களின் கதையுலகம்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றும் பொழுது கதை என்பது உயிரோட்டத்துடன் எழுதினால், படிப்பவர்களுக்கும் அவ்வாறே கொண்டு சேர்க்க வேண்டும். இதுதான் கதையின் அவசியமானக் கருவூலமாகும் என்றுரைத்தார். இவ்விழாவில் குழந்தைகளுக்கான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் வெளியீட்டுவிழாவில் எழுத்தாளர் ஞான சூரியபகவான், கவிஞர் மு.முருகேஷ், ஆசிரியர் ரமாதேவி, எழுத்தாளர் கன்னிக்கோயில் ராஜா, அபுதாபி துரை ஆனந்தகுமார், ஆசிரியர் பா.யேசுராஜா, எழுத்தாளர் பூவிதழ் உமேஷ் ஆகியோர் இவ்விழாவில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். மேலும் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் இரா. ஜெகதீசன் அவர்கள் சிறப்புரையாற்றும் பொழுது கல்லூரி நிர்வாகமும், முதல்வரும், படித்துறை புத்தக அறக்கட்டளையின் தலைவர் ப. இளம்பரிதி அவர்களும் மிகச்சிறப்பான வகையில் ஒருங்கிணைத்துக் கொடுத்தமையை பாராட்டி நன்றி தெரிவித்தார். இவ்விழா நிறைவில் சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கி சிறப்பு செய்யப்பட்டது. இம்மாநாடு சிறப்பாக நடைபெற தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ.பா. தாட்சாயிணி மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவரும் ஒருங்கிணைத்தனர். நிறைவாக இரண்டாமாண்டு இயற்பியல் துறை மாணவி பல்லவி அவர்கள் நன்றியுரை நவில நாட்டுப்பண்ணுடன் சிறார் இலக்கிய மாநாடு இனிதே நிறைவடைந்தது.

HOD OF THE DEPARTMENT

PRINCIPAL
Marudhar Kesari Jain College
for Women
Vaniyambadi - 635 751

**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI**

**(AProjectofSriMarudharKesariJainTrust)**

**Recognized u/s 2(f) & 12(B) by UGC Act 1956-Permanently Affiliated to Thiruvalluvar University**

**Re-Accredited by NAAC with "A" Grade -An ISO 9001:2015 Certified Institution**

## PG DEPARTMENT OF TAMIL ORGANIZED ON
## SIRARILAKKIYA MANAADU - 22.12.2021TO 23.12.2021







PRINCIPAL
larudhar Kesari Jain College
for Women
Vaniyambadi - 635 751